பாசிச நடவடிக்கைகளுக்கு எதிராக இந்தியாவைத் திரட்டுவோம்

உயிரே போனாலும் எதேச்சாதிகார பா.ஜ.க.வுக்கு அடி பணியமாட்டோம்: ஸ்டாலின் ஆவேசம்

சென்னை, மார்ச்.13– நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை விவகாரம் தொடர்பாக மத்திய பா.ஜ.க. அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக இந்தியாவைத் திரட்டுவோம், உயிரே போனாலும் அடி பணியமாட்டோம் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆவேசமாக கூறினார்.

நாடாளுமன்ற தொகுதி மறுவரையறைக்கு எதிராக 'தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்' என்ற தலைப்பில் தி.மு.க. அமைப்பு ரீதியாக செயல்படும் மாவட்டங்களில் நேற்று கண்டன பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருவள்ளூரில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் தி.மு.க. தலைவரும், தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு பேசியதாவது:

முந்தைய ஆட்சியாளர்களால் 10 ஆண்டுகாலம் தமிழகம் பெரிதும் பாதிக்கப்பட்டது. வளைந்த முதுகோடு தமிழ்நாட்டின் உரிமைகளை டெல்லியின் காலடியில் அடகு வைத்து ஊர்ந்த அவலம் அரங்கேறியது. தற்போது நம்முடைய உரிமைகளை பறிப்பதையும், தமிழ்நாட்டை கொச்சைப்படுத்துவதையும் நம்மால் அமைதியாக பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? ஆட்சியில் இருப்பதற்காக, பதவி சுகத்திற்காக மத்திய அரசிடம் பணிந்து செல்லும் முதுகெலும்பு இல்லாத அடிமை கூட்டம் இல்லை நாம்.

மத்திய அரசின் எதேச்சாதிகாரம்

சுயமரியாதையும், இனமான உணர்வும் கொண்ட இயக்கம் தி.மு.க. மத்திய அரசின் எதேச்சாதிகாரத்துக்கு தி.மு.க.வின் போராட்ட குணத்தை பார்க்க வேண்டிய நிலையை உருவாக்கி உள்ளார்கள்.

பிரதமர் மோடி, மத்தியில் ஆட்சிக்கு வந்த பிறகு மாற்று கட்சிகள், ஆட்சி பொறுப்பில் இருக்கும் மாநில அரசுகளை பழிவாங்க மாட்டேன். எந்த வகையிலும் மாநில அரசுகள் பழிவாங்கப்படாது என உறுதியளிக்கிறேன். என்னதான் அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும், மத்திய–மாநில உறவுகள் சீர்குலைய இடம் தரமாட்டேன் என்று சொன்னார். ஆனால் எதிர்க்கட்சி ஆளக்கூடிய மாநிலங்களை பழிவாங்கும் அரசியலை நடத்தி கொண்டு இருக்கிறீர்கள்.

தமிழ்நாடு என்ன பிச்சைக்காரர்கள் மாநிலமா? நாங்கள் உழைத்து வரி செலுத்திய பணத்தில் எங்களுக்கான நிதியை கொடுப்பதில் என்ன பிரச்சினை? 43 லட்சம் பள்ளி குழந்தைகளின் நலனுக்கான நிதியை விடுவிக்காமல் மிரட்டுவது நியாயமா?

தேசிய கல்வி கொள்கையை ஏற்க வில்லை என்று தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய நிதியை தர மறுக்கிறார்கள். தேசிய கல்வி கொள்கை என்பது கல்வி கொள்கை அல்ல, காவிக் கொள்கை. இந்தியாவை வளர்க்க அது உருவாக்கப்பட்ட கல்வி கொள்கை அல்ல. இந்த கல்வி கொள்கை தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியை அழித்து ஒழித்துவிடும் என்றுதான் எதிர்க்கிறோம்.

ஜனநாயகம்,நாகரிகம் தெரியாதா?

அந்த கோபத்தில்தான், மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் மீது கோபப்படுகிறார். நமக்கு ஜனநாயகத்தன்மை, நாகரிகம் இல்லையாம். 'கல்தோன்றி மண்தோன்றா காலத்தில் முன்தோன்றிய இனம் நம் தமிழ் இனம். உலகத்துக்கே 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற பண்பாட்டை உருவாக்கி கொடுத்த அத்தகைய தமிழனுக்கு ஜனநாயகம் தெரியாதா? நாகரிகம் தெரியாதா? வந்தாரை வாழ வைக்கும் தமிழ்நாடு இது.

தமிழ்நாடு விடாமல் போராடுவதை தாங்கிக்கொள்ள முடியாமல், தமிழ்நாட்டை சேர்ந்தவர்களை நாகரிகமற்றவர்கள் என்று சொல்கிறார். தமிழ்நாட்டை கொச்சைப்படுத்துவதுதான் உங்கள் வழக்கம். எங்கள் மாநிலத்தில் இருந்து வரியை வசூல் செய்துவிட்டு, எங்களையே பட்டினி போடுவதுதான் நாகரிகமா? தமிழ் பிடிக்கும், தமிழில் பேசமுடியவில்லையே என்று கூறிவிட்டு, தமிழுக்கு நிதி ஒதுக்கீடு செய்யாமல், சமஸ்கிருதத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்வதுதான் நாகரிகமா?

தாய் மொழியை வலியுறுத்துகிறோம் என்று சொல்லிவிட்டு, சமஸ்கிருதத்தையும், இந்தியையும் திணிப்பதுதான் நாகரிகமா? குஜராத்தில் இயற்கை பேரிடர் வந்தால் அன்று மாலையே ரூ.10 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்வதும், தமிழகத்தில் பேரிடர் நடந்து 2 ஆண்டுகள் ஆன பிறகும் நாங்கள் கேட்டத்தில் ஒரு விழுக்காடு நிதி கூட ஒதுக்காமல் இருப்பதுதான் நாகரிகமா? ஒரே ஒரு எய்ம்ஸ் ஆஸ்பத்திரியை அறிவித்துவிட்டு, 7 ஆண்டுகள் ஆகியும் அதை கட்டாமல் ஏமாற்றுவதுதான் நாகரிகமா? நாகரிகத்தை பற்றி யார் பேசுவது ? அநாகரிகத்தின் அடையாளமே நீங்கள்தான். அநாகரிகத்தையே அராஜகமாக பயன்படுத்துவது நீங்கள்தான்.

இந்திய நாட்டின் கூட்டாட்சி அமைப்புக்கும், ஜனநாயக கொள்கைகளுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் தொகுதி மறுசீரமைப்பு இருக்கிறது. தமிழகத்தை சேர்ந்த 39 எம்.பி.க்கள் குரலை மத்திய அரசு ஏற்க மறுக்கும் நிலையில், இந்த எண்ணிக்கை இன்னும் குறைந்தாலோ, குறைக்கப்பட்டாலோ அது தமிழ்நாட்டுக்கு இழைக்கப்படும் அழிக்க முடியாத அநீதி ஆகும். பல்வேறு மாநில கட்சிகள் இணைந்து எடுக்கும் முடிவுகளின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை நாம் எடுப்போம். நிதி தரமாட்டோம். அதிகாரத்தை பறிப்போம். இதை கேள்வி கேட்டால் தொகுதிகளை குறைப்போம் என்ற அளவுக்கு எதேச்சதிகார ஆட்சியை நடத்தும் பா.ஜ.க.வுக்கு, உறுதியோடு சொல்கிறேன். பா.ஜ.க.வின் பாசிச நடவடிக்கைகளுக்கு நாம் எந்த காரணத்தை கொண்டும், உயிரே போனாலும் அடிபணியமாட்டோம்.

பா.ஜ.க.வின் பாசிச நடவடிக்கைகளுக்கு எதிராக ஒட்டுமொத்தமாக இந்தியாவை திரட்டுவோம். சமூக நீதி, மதசார்பின்மை, கூட்டாட்சி இந்தியா, மாநில சுயாட்சி கோட்பாடுகளின் கீழ் இந்தியாவை அணி திரட்டுவோம். அப்படி அணி திரட்டினால் மட்டுமே இந்தியாவை காப்பாற்ற முடியும். அதனால் தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என்ற போராட்டமானது இந்தியா முழுமைக்குமான போராட்டமாக மாற போகிறது. தமிழ்நாடு தொடர்ந்து இறுதிவரை போராடும். தமிழ்நாடு இறுதியில் வெல்லும். இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

அமைச்சர் ஆவடி நாசர், தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் உள்பட நிர்வாகிகளும், தி.மு.க. தொண்டர்களும் திரளாக கலந்து கொண்டனர்.

ரூ.15 ஆயிரத்து 906 கோடியில்

பூந்தமல்லி – பரந்தூர் விமான நிலையம் இடையே மெட்ரோ ரெயில் திட்டம் நீட்டிப்பு

சென்னை, மார்ச்.13– பரந்தூரில் புதிய விமான நிலையம் வருவதன் எதிரொலியாக பூந்தமல்லி – பரந்தூர் வரையில் ரூ.15 ஆயிரத்து 906 கோடி மதிப்பீட்டில் மெட்ரோ ரெயில் சேவையை நீட்டிப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தமிழக அரசிடம் சமர்பிக்கப்பட்டு உள்ளது.



சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் மெட்ரோ ரெயில் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. மெட்ரோ ரெயில்கள் விரைவான சேவைகளையும் வழங்கி வருகிறது.

சென்னை விமான நிலையம் – விம்கோ நகர், சென்டிரல் – பரங்கிமலை ஆகிய 2 வழித்தடங்களில் சுமார் 55 கிலோ மீட்டர் தூரத்துக்கு மெட்ரோ ரெயில்கள் இயக்கப்படுகின்றன. நாள்தோறும் மெட்ரோ ரெயில் சேவையை 3 லட்சம் பேர் பயன்படுத்தி வருகிறார்கள். ஆரம்பம் முதலே மெட்ரோ ரெயில் சேவைக்கு பொதுமக்களிடம் வரவேற்பு இருந்தது.

இதனால் 118.9 கிலோ மீட்டர் தொலைவுக்கு ரூ.63 ஆயிரத்து 246 கோடி மதிப்பீட்டில் 2ம் கட்ட மெட்ரோ ரெயில் பணிகள் நடைபெற்று வருகிறது. மாதவரம் பால் பண்ணை முதல் சிறுசேரி சிப்காட் இடையே 45.8 கிலோ மீட்டர் தொலைவுக்கும், கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி பணிமனை வரையில் 26.1 கிலோ மீட்டர் தொலைவிற்கும், மாதவரத்தில் இருந்து சோழிங்கநல்லூர் வரையிலும் 47 கிலோ மீட்டர் தொலைவில் என 3 வழித்தடங்களில் சென்னை மெட்ரோ ரெயில் கட்டுமான பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இதில், மாதவரம் – சிறுசேரி சிப்காட் இடையே 3வது வழித்தடத்தில் 19 உயர்மட்ட மெட்ரோ ரெயில் நிலையங்கள் மற்றும் 28 சுரங்கப்பாதை மெட்ரோ ரெயில் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. கலங்கரை விளக்கம் – பூந்தமல்லி பணிமனை வரையிலான 4வது வழித்தடத்தில் 18 உயர்மட்ட நிலையங்களும், 9 சுரங்கப்பாதை மெட்ரோ ரெயில் நிலையங்களும், மாதவரம் – சோழிங்கநல்லூர் வரையிலான 5வது வழித்தடத்தில் 39 உயர்மட்ட மெட்ரோ ரெயில் நிலையங்களும், 6 சுரங்கப்பாதை மெட்ரோ ரெயில் நிலையங்களும் அமைய உள்ளன.

இதற்கிடையே மெட்ரோ ரெயில் திட்டப்பணிகளை புறநகர் பகுதிகளுடன் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. இதையடுத்து, கோயம்பேடு முதல் பட்டாபிராம் வரையில் 21.76 கிலோ மீட்டர் தொலைவுக்கு மெட்ரோ ரெயில் திட்டம் நீட்டிக்கப்பட்டது. இதேபோல, கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி பணிமனையுடன் முடியும் திட்டத்தில், பரந்தூர் (விமான நிலையம் அமையவுள்ளது) வரையில் 43 கிலோ மீட்டர் தொலைவுக்கு மெட்ரோ ரெயில் திட்டத்தை நீட்டிக்க ஆலோசிக்கப்பட்டது. இதற்கான சாத்தியக்கூறு அறிக்கை கடந்த ஆண்டு ஜனவரி மாதம் தமிழக அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

பரந்தூர் வரை நீட்டிப்புக்கு ஒப்புதல்

இந்த சாத்தியக்கூறு அறிக்கையை தமிழக அரசு பரிசீலனை செய்து வழித்தடம் நீட்டிப்புக்கு ஒப்புதல் அளித்தது. தமிழக அரசின் ஒப்புதலை தொடர்ந்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியில் மெட்ரோ ரெயில் நிறுவனம் இறங்கியது.

பூந்தமல்லி – பரந்தூர் வரையில் பெரும்பாலும் உயர்மட்ட பாதைகளாக அமைக்கவே முடிவு செய்யப்பட்டு அதற்கான கள ஆய்வுகள் செய்யப்பட்டு வந்தது. இதற்கிடையே பூந்தமல்லி முதல் பரந்தூர் வரையில் மெட்ரோ ரெயில் திட்டத்தை நீட்டிப்பதற்கான விரிவான திட்ட அறிக்கையை தமிழக அரசிடம் மெட்ரோ ரெயில் நிறுவனம் சமர்பித்துள்ளது.

சென்னை தலைமை செயலகத்தில் நேற்று முன்தினம் (11ந்தேதி) சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் சித்திக், தமிழ்நாடு அரசின் சிறப்பு முயற்சிகள் துறை செயலாளர் கோபாலிடம் திட்ட அறிக்கையை சமர்ப்பித்தார். தமிழக அரசிடம் வழங்கியுள்ள திட்ட அறிக்கையில், பூந்தமல்லியில் இருந்து செம்பரம்பாக்கம், தண்டலம், இருங்காட்டுக்கோட்டை, ஸ்ரீபெரும்புதூர், சுங்குவார்சத்திரம் வழியாக பரந்தூர் விமான நிலையம் வரையில் வழித்தடம் அமைகிறது.

இந்த வழித்தடத்தின் மொத்தம் நீளம் 52.94 கிலோ மீட்டர் ஆகும். மொத்தம் 20 மெட்ரோ ரெயில் நிலையங்கள் அமைய உள்ளன. திட்டத்தின் மொத்த செலவு ரூ.15 ஆயிரத்து 906 கோடி என மதிப்பிடப்பட்டு உள்ளது. இந்த திட்டத்தில், பூந்தமல்லி முதல் சுங்குவார்சத்திரம் வரையில் ரூ.8 ஆயிரத்து 779 கோடி மதிப்பீட்டில் 14 நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

2ம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டப் பணிகளை வரும் 2028ம் ஆண்டுக்குள் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர இலக்கு நிர்ணயித்துள்ளது.

IN THE COURT OF THE HON'BLE IIND ADDITIONAL FAMILY COURT AT CHENNAI
H.M.O.P. NO. 4137 OF 2024

Loganayaki, W/o.Suresh
18/15, Rani Anna Nagar
K.K.Nagar, Chennai-600 078.
.....Petitioner/Petitioner
-vs-
Mr.Suresh S/o. Ezhumalai
11/197, Nehruji Street
Moogambigai Nagar
Chinna Pancihery,
Paraniputhur, Chennai-600 128
...Respondents/Respondents

Please take notice that the Petitioner had filed the above H.M.O.P No.4137 of 2024. In the above divorce case came up for hearing on 17.04. 2025.

The learned IInd ADDITIONAL FAMILY Court at Chennai has been pleased to order notice to you by Paper Publication returnable by 17.04.2025. Kindly appear on 17.04.2025 at 10:30 A.M before the said Court failing which the case will be heard and decide in your absence.

Loganayaki
Petitioner

IN THE COURT OF SUBORDINATE JUDGE AT TAMBARAM
I.A.No.2 of 2022
in
O.S.No.177 of 2009

Mrs.R.Vasanti Ram Narayan
Wife of Mr.S.Rama Narayan,
32, Ramachandra Road, Nehru Nagar,
Chromepet, Chennai - 600044.
...Petitioner/Plaintiff
-Vs-
1.Mr.Suresh (Died), Son of E.Sivalingam,
2.Mr.Ramesh (Died), Son of E.Sivalingam,
3.Mrs.T.Malini, Wife of N. Thangavelu,
4.Mrs.K. Mythili, Wife of G.C. Kadhiravan,
5.Ms. Shalini, D/o.Mr.E.Sivalingam
6.Mrs.Prabha Ramesh,
Wife of Late Ramesh,
7.Mr.Akash, Son of Late Ramesh,
8.Ms.Bhavya, D/o.Late Ramesh,
...Respondents/Defendants
9.Mrs. Uma Suresh , Wife of Suresh,
...Proposed 9th Defendant

To
R8. Ms.Bhavya, D/o.Late Ramesh,
Represented by her
Natural Guardian and Mother
(the 6th Respondent/Defendant)
Sl.No.6, 7 and 8 all are residing at
No. 20, Plot No. 130, 1st Street,
Vivekananda Nagar, Chennai - 600118.

Madam,

Please take notice that the above suit has been filed as against you and the same has been posted for your appearance on 24.03.2025 before the Hon'ble Sub Judge at Tambaram at 10.30 A.M. Hence you have to appear before the Hon'ble Sub Judge, Tambaram on 24.03.2025 at 10.30 A.M. in person or through duly instructed counsel, failing which the same will be heard and decided in your absence.

MR.N.KARUNANIDHI
ADVOCATE FOR PLAINTIFF

SMFG Grihashakti
எஸ்எம்எப்ஜி இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
(முன்பு புல்லர்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கோ. லிமிடெட்)
கார்ப்பரேட் அலுவலகம் : 503 & 504, 5வது தளம், ஜி பிளாக், இன்சிப்ரே பிகேசி, பிகேசி மெயின் ரோடு, பாந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பாந்த்ரா (இ), மும்பை 400051.
பதிவு அலுவலகம் : காமர்ஸ்சோன் ஐடி பார்க், டவர் பி, முதல் தளம், எண்.111, மவுண்ட் பூந்தமல்லி சாலை, போரூர், சென்னை 600 116, தமிழ்நாடு

அசையா சொத்து சுவாதீனம் எடுத்த அறிவிப்பு [(பிற்சேர்க்கை IV விதி 8 (1) ன் கீழ்)]

கீழேகையொப்பமிட்டுள்ளவீட்டுகடன்வசதிவழங்கும்நிறுவனமான[தேசியவீட்டுவசதிவங்கியில்முறையாகப்பதிவுசெய்யப்பட்டுள்ளது(முழுமையாகRBIக்குசொந்தமானது)] **எஸ்எம்எப்ஜி இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின்** (முன்பு புல்லர்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கோ. லிமிடெட்) (இனி SMHFC என அழைக்கப்படும்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் (54 ஆம் 2002), மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதி(முறைக்கு ஏற்பவும், மேற்படி சட்டத்தின் 13(2) பிரிவின் கீழ் கடன்தாரர்களாகிய நீங்கள் (கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள்) அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையையும் அதற்கான வட்டியையும் அந்த அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். கடன்தாரர்(கள்) மேற்குறிப்பிட்டுள்ள தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டப்பிரிவு 13, துணை பிரிவு (4)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் 8வது விதிமுறைக்கு இணங்கவும் சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து "SMHFC"க்கு செலுத்த வேண்டிய கீழ்க்கண்ட தொகை மற்றும் வட்டிக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்களும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வ. எண்	கடன்தாரர் / உத்தரவாததாரர் பெயர் மற்றும் கடன் கணக்கு எண்	பாதுகாக்கப்பட்ட சொத்துகளின் விவரம் (அசையா சொத்து)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை	சுவாதீனத் தேதி
1.	கடன் கணக்கு எண் : 601007210370260 & 601007510418972 1. சரவணன் எம். (விண்ணப்பதாரர்) த/பெ. மீனாட்சி சுந்தரம் பெரியகருப்பன் 2. எஸ்.சித்தரா க/பெ. சரவணன் எம், (உடன் கடன்தாரர்)	சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும் நிலம் மற்றும் கட்டிடம். மனை எண். 5C, விஸ்தீரணம் 1122 சதுர அடி நிலம். இந்த நிலம் பழைய சர்வே எண். 148/1, புதிய சர்வே எண். 148/18, பட்டா எண். 1543ன் படி, புதிய சர்வே எண்.188/1B13, ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், கொளப்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ளது மற்றும் இதன் எல்லைகள் • வடக்கு : மனை எண். 5D; • தெற்கு : காத்தாயி அம்மன் நகர்; • கிழக்கு : 10 அடி பொதுச் சாலை மற்றும் மனை எண். 58; • மேற்கு : சலன் நகர் லேஅவுட். + விஸ்தீரணம் • வடக்குப் பக்கத்தில் : 27 அடி; • தெற்குப் பக்கத்தில் : 35 அடி; • கிழக்குப் பக்கத்தில் : 79 (ஸ்ப்ளே) + 23'3 அடி; • மேற்குப் பகுதியில்: 34 அடி 9 அங்குலம். இந்த சொத்தானது பம்மல் சார்பதிவு மாவட்டம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்டத்தில் உள்ளது.	11.12.2024 ரூ.45,67,638.55/– (ரூபாய் நாற்பத்தைந்து லட்சத்து அறுபத் தோராயிரத்து அறுநூற்று முப்பத்தி யெட்டு மற்றும் ஐம்பத்தைந்து பைசா மட்டும்) மற்றும் வட்டி	06.03.2025

இடம் : காஞ்சிபுரம், தமிழ்நாடு
தேதி : 06.03.2025

ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
எஸ்எம்எப்ஜி இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டிற்காக
(முன்னா புல்லர்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கோ. லிமிடெட்)

HDFC BANK
We understand your world
பதிவு அலுவலகம்: ஹெச்டிஎப்சி பேங்க் ஹவுஸ், சேனாபதி பாபட் மார்க், லோயர் பாரேல் (மேற்கு), மும்பை 400 013 மற்றும் அதன் அலுவலகம் ஒன்று உள்ளது
ரீடெய்ல் போர்ட்போலியோ மானேஜ்மெண்ட், ஹெச்டிஎப்சி பேங்க் லிமிடெட், 1வது தளம், ஐ–திங்க் டெக்னோ வளாகம், கஞ்சூர்மார்க் (கிழக்கு), மும்பை 400042.

ஹெச்டிஎப்சி பேங்க் லிமிடெட்டில் அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்கள் விற்பனை அறிவிப்பு மற்றும் பொது அறிவிப்பு

பத்திரங்களுக்கு எதிரான கடன்/ஓவர் டிராப்ட்டின் தன்மையில் கடன் வசதிகளைப் பெறுவதற்காக, வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்களை விற்பனை செய்வது குறித்து ஹெச்டிஎப்சி வங்கி லிமிடெட்டின் ("வங்கி") கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஒப்புக் கொள்ளப்பட்ட கடன் விதிமுறைகளின்படி நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்துவதில் கடன்தாரர்கள் தொடர்ந்து தவறியதன் காரணமாக, கீழேயுள்ள கடன் கணக்குகள் கடனற்ற நிலையில் உள்ளன. இந்த கடன் வாங்குபவர்களுக்கு வங்கி கீழே குறிப்பிடப்பட்ட தேதியில் இறுதி விற்பனை அறிவிப்பு உட்பட பல அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது, வங்கி உறுதிமொழியை செயல்படுத்தி, கடன்தாரருக்கு கீழே உள்ள கணக்குகளில் உள்ள நிலுவைத் தொகையை முழுவதுமாக திருப்பிச் செலுத்த 7 நாட்கள் அவகாசம் வழங்கியது, தவறினால், இது தொடர்பாக மேலும் அறிவிப்பை வெளியிடாமல், அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்களை விற்க வங்கிக்கு சுதந்திரம் உள்ளது.

கடன்தாரர்கள் செலுத்த வேண்டிய தொகையை புறக்கணித்தனர் மற்றும் செலுத்தத் தவறி விட்டனர், எனவே, கடன் ஒப்பந்தத்தின் கீழ் வங்கி அதன் உரிமைகளைப் பயன்படுத்துவதன் மூலம், 20 **மார்ச்,** 2025 அன்று அல்லது அதற்குப் பிறகு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை மீட்டெடுப்பதற்காக பத்திரங்களை விற்க/ அப்புறப்படுத்த முடிவு செய்துள்ளது. எந்த நேரத்திலும், பங்குச் சந்தையில் ஏற்படும் ஏற்ற இறக்கம் காரணமாக, அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்களின் மதிப்பு மேலும் வீழ்ச்சியடைந்தால், மார்ஜின் தேவையில் மேலும் குறைபாட்டை உருவாக்கினால் பின்னர் வங்கி அதன் விருப்பத்தின் பேரில் அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்களை ஒரு (1) காலண்டர் நாளுக்குள், இது தொடர்பாக எந்த அறிவிப்பும் இல்லாமல் விற்கும் என்று கடன்தாரர்களுக்கு மேலும் அறிவிக்கப்படுகிறது. அடமான பத்திரங்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாயை சரிசெய்த பிறகும் மீதமுள்ள நிலுவைத் தொகையை திருப்பிச் செலுத்த கடன்தாரர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

வ. எண்.	கடன் கணக்கு எண்	கடன்தாரர் பெயர்	6 மார்ச், 2025 அன்று செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை	விற்பனை அறிவிப்பு தேதி
1	XXXX0326	சுனில் குமார் மேத்தா	164.78	11-03-2025
2	XXXX8655	கே ஆர் கீதா ரமணி	7,08,775.33	11-03-2025
3	XXXX2365	கே சுஜாதா	67.93	11-03-2025
4	XXXX2100	ஆர் புனிதா	99,802.64	11-03-2025
5	XXXX6876	ஜே வைசாலி	2,22,429.60	06-03-2025
6	XXXX4200	கிருத்திகா ஜி	2,23,901.00	06-03-2025
7	XXXX4502	மாளவிகா ஜெயராம்	3,84,835.48	06-03-2025
8	XXXX5404	கௌசல்யா கவுர்	99,815.84	11-03-2025
9	XXXX9422	கே கே ராமச்சந்திரன்	9,64,902.00	11-03-2025
10	XXXX7759	கே மாதவன்	9,92,616.82	11-03-2025
11	XXXX1388	செல்வம் யாமினி	11,38,873.82	06-03-2025
12	XXXX8511	பார்வதி	48,932.82	06-03-2025
13	XXXX1061	கே ஸ்ரீகாயத்திரி	19,76,076.13	11-03-2025
14	XXXX2700	ஜே ராஜதுரை	4,14,777.88	11-03-2025

நாள் : 13.03.2025
இடம் : தமிழ்நாடு
ஒப்பம்/–
ஹெச்டிஎப்சி பேங்க் லிமிடெட்

மெட்ராஸ் உயர்நீதிமன்றம்
(உயில் மற்றும் உயில் இல்லாத வழக்கு பற்றிய ஆள்வரை)
முதலேற்பு மனு எண். 809/2024
இந்திய வாரிசுரிமைச் சட்டம் பபப/1925
தொடர்பான மனு மற்றும் 14.11.2019 அன்று காலம் சென்ற திரு. கே.வா.நித்யானந்தம் அவர்களின் உயில் சாசனம் தொடர்பான மனு

1) திருமதி. A. அம்பிகா, க/பெ. அன்பு இலங்கோ
த/பெ. லேட் கே.வா.நித்யானந்தம்
எண்.14A, செந்தில் நகர், பொன்னியம்மன்மேடு,
அம்பத்தூர், சென்னை–600 110
2) திருமதி. மனோன்மணி, க/பெ. வி.ராஜன்
த/பெ. லேட் கே.வா.நித்யானந்தம்
பிளாட் எண்.231, பிளாக் E5,
பரமேஸ்வரன் விஹார், எண்.67,
ஆற்காடு சாலை, சாலிகிராமம், சென்னை – 600 096
3) திருமதி. J. நிர்மலா,
க/பெ. வி.ஜெய கோபால்
த/பெ. லேட் கே.வா.நித்யானந்தம்
பிளாட் எண்.137–138, திருவாய்மொழி தெரு,
அய்யனார் அவின்யூ, திருவள்ளூர்–602 001
4) திருமதி. K.N.சரோஜா
க/பெ. திரு. சம்பத்குமார்
த/பெ. லேட் கே.வா.நித்யானந்தம்
எண்.21/8, 3வது பிரதான சாலை,
நங்கநல்லூர், சென்னை–600 061
5) திருமதி. R. வாணி ஸ்ரீ
க/பெ. திரு. ஆர். ரகுராமன்
த/பெ. லேட் கே.வா.நித்யானந்தம்
எண்.48/60, 2வது சாலை, LOCO திட்டம்,
ஜவஹர் நகர், சென்னை–600 082
– மனுதாரர்கள்

சென்னை – 600 082, ஜவஹர் நகர், 2வது தெரு, லோகோ ஸ்கீம், எண். 48/60 என்ற முகவரியில் வசித்து வந்து 14.11.2019 அன்று காலம் சென்ற திரு. K.V.நித்யானந்தம் அவர்களின் உயில் சொத்துக்களில் ஏதேனும் பாத்தியதை கோருகின்ற அனைவரும் தங்களுக்கு தக்கதெனக் கருதினால் நீதிமன்றம் வாரிசுரிமைச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கு முன்பு மெட்ராஸ் உயர்நீதிமன்ற மாஸ்டர் கோர்ட்டில் 07.04.2025 அன்று காலை 10.30 மணிக்கு மேற்படி மனு விசாரணையின் போது நடவடிக்கைகளைப் பார்த்து தங்களது ஆட்சேபணைகளைத் தெரிவித்துக்கொள்ளுமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறார்கள்.

2025ம் ஆண்டு மார்ச் மாதம் 4ம் தேதி சென்னையில் கையொப்பமிடப்பட்டது.

R. ரவீந்திரன், S. ஜெயா ஸ்ரீ,
K. ஸ்ரீ ருத்ரா
மனுதாரரின் வழக்கறிஞர்கள்,
எண்.5/9, 1வது தளம்,
அறை எண்.108, சுங்குராமன் தெரு,
சென்னை–600 001

S. கண்ணன்
உதவி பதிவாளர்
முதலேற்பு பிரிவு–I
உயர்நீதிமன்றம்
சென்னை– 600 104

IN THE COURT OF THE HON'BLE IIND ADDITIONAL FAMILY COURT AT CHENNAI
H.M.O.P. NO. 4137 OF 2024

Loganayaki, W/o.Suresh
18/15, Rani Anna Nagar
K.K.Nagar, Chennai-600 078.
.....Petitioner/Petitioner
-vs-
Mr.Suresh S/o. Ezhumalai
11/197, Nehruji Street
Moogambigai Nagar
Chinna Pancihery,
Paraniputhur, Chennai-600 128
...Respondents/Respondents

Please take notice that the Petitioner had filed the above H.M.O.P No.4137 of 2024. In the above divorce case came up for hearing on 17.04. 2025.

The learned IInd ADDITIONAL FAMILY Court at Chennai has been pleased to order notice to you by Paper Publication returnable by 17.04.2025. Kindly appear on 17.04.2025 at 10:30 A.M before the said Court failing which